5. அரசினர் தீர்மானங்கள்.

(ஆ) பேரவை நாள் குறிப்பிடப்பெருமல் ஒத்தி வைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தற்போது, பேரவையை ஒத்தி வைப்பது குறித்து மாண்புமிகு அவை முன்னவர் ஒரு தீர்மானத்தை முன்மொழிவார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மெத்த வருத்தத்தோடு இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழியக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30-ம் தேதி நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடி பேரவையின் அலுவல்கள் இன்ருேடு முடிவடைவதால், பேரவை கால வரம்பின்றி ஒத்தி வைக்கப்பெறும்''

திரு. க. சுப்பு : துணைத் தலைவரவர்களே, மெத்த வருத்தத்தோடு என்று சொன்னல் நாங்கள் அதை ஒத்துக் கொள்வது மாதிரி இருக்கும். அதை எடுத்து விட்டால் ஒத்துக் கொள்கிருேம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களையெல்லாம் பார்க்கும் சந்தர்ப்பம் இல்லை என்பதற்காக அப்படிச் சொல்லி இருக்கிருர்கள்.

திரு. துரை முருகன் : மீண்டும் அவை இந்த வருஷத்திற்குள் கூடுமா ? அல்லது அடுத்த வருஷம் தானு ?

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெருமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-05 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.